# திருநெல்வேலி மாநகராட்சி

## 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையத்தினை நவீனமயமாக்கும் திட்டப்பணியினை ரூ.14.80 கோடியில் மேற்கொள்வதற்கு 16.09.2019 அன்று நடைபெற்ற 7வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 12-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3 நாள் 04.11.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும் தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 28429/2019/DO2 நாள் 5.12.2019ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 12.02.2020 மற்றும் 23.03.2020 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில் இரண்டு தேதிகளிலும் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை.

அதன் பின்னர், மேற்படி திட்டப்பணிக்கான மதிப்பீட்டுடன் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையத்தில் மேம்படுத்தும் பணிக்கான ஒரு சில இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளமையால் அதனை தவிர்த்து திருத்திய மதிப்பீடு ரூ.13.20 கோடிக்கு தயார் செய்யப்பட்டு முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களிடம் திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணியினை மேற்கொள்வதற்கு மூன்றாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 26/2018-19/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 26.03.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 13.04.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில், கொரானா (COVID-19) வைரஸ் நோய் தொற்று காரணமாக 25.03.2020 முதல் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 12.08.2020 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ். ஸ்ரீ நாச்சிமார் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், நாமக்கல் மற்றும் (2) மெசர்ஸ்.ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 13.08.2020-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் மெசர்ஸ்.ஸ்ரீ நாச்சிமார் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், ஒப்பநதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 14.08.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி, நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரேஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ்.ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புளளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 17.08.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையத்தினை நவீனமயமாக்கும் பணிகள் செய்தல். | ரூ.12,59,21,671/- | ரூ.13,45,93,486/- |
| | | | 6.89% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்பு ரூ.13,45,93,486/- ஆனது மதிப்பீட்டை விட 6.89% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 17.08.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 19.08.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 6.89% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டைவிட 4.99% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.13,22,04,863/-ஆனது மதிப்பீட்டை விட 4.99% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 19.08.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 21.08.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகி விட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 21.08.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,22,04,863/- மதிப்பீட்டை விட 4.99% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) மேற்படி, திருநெல்வேலி மாநகராட்சி - திருநெல்வேலி சீர்மிகு நகர (Smart City Limited) திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையத்தினை நவீனமயமாக்கும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், மூன்றாவது அழைப்பாக

இருப்பதாலும், 21.08.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், ராமநாதபுரம் நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,22,04,863/- மதிப்பீட்டை விட 4.99% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1320.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 99:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 26/2018-19/SCM)

---

2) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 1, குறிஞ்சி நகர் பகுதியில் தெருவிளக்குகள் புதியதாக 4 எண்ணம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே குறிஞ்சி நகர் மக்கள் கோரிக்கையை ஏற்று, மேற்படி சாலையில் மின்கம்பங்களில் 4 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்துவதற்கும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.80,000/-த்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 1, குறிஞ்சி நகர் பகுதியில் தெருவிளக்குகள் புதியதாக 4 எண்ணம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே குறிஞ்சி நகர் மக்கள் கோரிக்கையை ஏற்று, மேற்படி சாலையில் மின்கம்பங்களில் 4 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்துவதற்கும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.80,000/-த்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 100:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/2752/2020-தச்சை)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 1, நல்மேய்ப்பர் நகர் 10வது தெருவில் தெருவிளக்குகள் புதியதாக 4 எண்ணம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே நல்மேய்ப்பர் நகர் மக்கள் கோரிக்கையை ஏற்று, மேற்படி சாலையில் மின்கம்பங்களில் 5 20 W LED எண்ணம் தெருவிளக்கு பொருத்துவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.100000/-த்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 1, நல்மேய்ப்பர் நகர் 10வது தெருவில் தெருவிளக்குகள் புதியதாக 4 எண்ணம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே நல்மேய்ப்பர் நகர் மக்கள் கோரிக்கையை ஏற்று, மேற்படி சாலையில் மின்கம்பங்களில் 5 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்துவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.100000/-த்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 101:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/2378/2020-தச்சை)

---

4) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட EMD/FSD தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு M/s Sri Ramana Building Constructions (P) Ltd ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 17.03.2020ம் தேதிய விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | EMD | FSD | Register Details |
|---|---|---|---|---|
| 1 | Additional work of flooring and Electrification work at Kallanai Girls Hr. Sec.School West Block | 10000 | 10000 | Tvl.Zone 2016-17 P.No.18 |
| 2 | Supply and fixing of steel desk and benches, SS hand rails for Corporation Kallanai girls Hr.Sec. School in Tirunelveli Ward Office Block “C” | 10000 | 10000 | Tvl Zone 2016-17 P.No.19 |
| 3 | (i) Proposed additional construction of Class room and Lab building for Corporation kallanai Girls Hr. Sec. School at Tirunelveli Town Tirunelveli Ward Office<br>(ii) Proposed additional construction of Auditorium and Lab building for “Corporation Kallanai Girls Hr. Sec.School” at Tirunelveli Ward Office Tirunelveli City Municipal Corporation | 280507 | 0 | Main Office 2015-16 /II P.No.11 |
| 4 | (iii) Proposed additional construction of class room building for Corporation Kallani Girls Hr. Sec. school in Tirunelveli Town, Tirunelveli ward Office, Tirunelveli City Municipal corporation. Blofk A, Block B & Block C and Proposed additional construction of class room building for Rani Anna Girls Hr. Sec.School, MNP Sannathi Street at Pettai, Tirunelveli Town, Tirunelveli Ward Office, Tirunelveli City Municipal Corporation. | 380000 | 380000 | Main Office Lapsed 2016-17/I P.No.37 |
| 5 | (i) Proposed Additional Construction of Class Room Building at Kamarajar Higher Secondary School in Pettai, Tirunelveli Ward Office, Tirunelveli City Municipal Corporation. Block A<br>(ii) Proposed additional Construction of class room Building at Kamarajar Higher Secondary School in Pettai, Tirunelveli Ward office, Tirunelveli City Municipal Corporation Block B | 200000 | 0 | Main Office Lapsed 2016-17/I P.No.43 |
| 6 | Proposed additional construction of class room building for primary school at Palayapettai in Ward No.50 | 44958 | 0 | Main Office 2016-17/I P.No.36 |
| | Total | 925465 | 400000 | 1325465 |

அலுவலகக் குறிப்பு:

மேற்படி EMD/FSD தொகை திருநெல்வேலி மண்டலம் மற்றும் மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10(i)(iii)-ன்படி EMD/FSD

தொகை ரூ.13,25,465/-மட்டும் M/s Sri Ramana Building Constructions (P) Ltd ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 102:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/858/2020-திலி)

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்பு/பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் திரு.M.தனபால் என்பவரால் 23/10/2019-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | EMD/FSD (Rs.) | Register Details |
|---|---|---|---|
| 1 | Ragumanpettai School 1st Floor class room in Ward.No.48 | 10000 | Tvl.Zone 2015-16 P.No.14,15 |
| | | 10000 | |
| 2 | Maintenance of Town Hospital in Ward No.41 | 10000 | Tvl.Zone 2015-16 P.No.14, 16 |
| | | 10000 | |
| 3 | Maintenance work at Town Hospital Building in ward. No.42 | 10000 | Tvl.Zone 2016-17 P.NO.20 |
| | | 10000 | |
| | | 60000 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன்வைப்பு/பின்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-ஆக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)-ன்படி தொகை ரூ.60,000/- மட்டும் ஒப்பந்ததாரர் திரு.M.தனபால் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 103:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 83/14-15-திலி)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அனைத்து மண்டல அலுவலகத்திற்கும் சோத்து ஒருங்கிணைக்கப்பட்ட ஆடறுப்பு மனைக்கு கடந்த 2009-ம் ஆண்டு 2016ம் ஆண்டு வரை மூன்று ஆண்டு காலத்திற்கான உரிமம் திரு.எஸ்.பி.பாண்டியன் என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட உரிம இனத்திற்கான கூடுதல் காப்புத் தொகை (Security Deposit) ரூ.5,00,000/- ஆனது திருநெல்வேலி மண்டல அலுவலக கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு.

| வ.எண் | உரிமதாரர் பெயர் | உரிம இன பெயர் | கூடுதல் காப்புத் தொகை மற்றும் வைப்புத் தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.பி.பாண்டியன் | ஒருங்கிணைந்த ஆடறுப்பு மனை மேலப்பாளையம் மண்டலம் | ரூ.5,00,000/- திருநெல்வேலி மண்டல வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் 12 வருடம் 2009-2010 |

மேற்கண்ட கூடுதல் காப்புத் தொகையானது கடந்த 2009-2010ம் ஆண்டு செலுத்தப்பட்டு தற்போது மூன்றாண்டுக்கு மேலாகிவிட்டது. மேலும் இது தொடர்பாக தணிக்கை ஏதும் நிலுவையில்லை.

மேலும் உரிமதாரர் திரு.எஸ்.பி.பாண்டியன் என்பவர் 28.04.2018-ல் காலமாகிவிட்டதால், அன்னாரது மனைவி திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவருக்கு கூடுதல் காப்புத்தொகை ரூ.5,00,000/-ஐ திரும்ப வழங்க வாரிசுதாரர்களால் நோட்டரி வழக்கறிஞர் ஏலம் ஆட்சேபணை இல்லை என உறுதிமொழி சான்று பெறப்பட்டுள்ளது. எனவே திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவருக்கு கூடுதல் காப்பு தொகை ரூ.5,00,000/-ஐ திரும்ப வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேலே பொருளில் கண்டவாறு உரிமஇனத்திற்கு செலுத்தப்பட்ட கூடுதல் காப்புத் தொகையான ரூ.5,00,000/-ஐ மறைந்த திரு.எஸ்.பி.பாண்டியன் அவர்களது மனைவியும், வாரிசதாரருமான திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவருக்கு திரும்ப வழங்குவது குறித்து மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 104:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் பி1/343/2020-திலி)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்குட்பட்ட மாநகராட்சி பள்ளிக்கட்டிடங்கள், அரசு பள்ளிக் கட்டிடங்கள், பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கட்டிடங்கள் ஆக மொத்தம் 45 எண்ணம் பள்ளிக்கட்டிடங்களில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் பள்ளி வளாகங்களில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்கு 135 தூய்மை பணியாளர்கள் மற்றும் 4 மேற்பார்வையாளர்களை வெளிக்கொணர்வு மூலம் ஒருவருட காலத்திற்கு அமர்த்திக் கொள்வதற்கு ரூ.164.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண் 44, நாள் 08.05.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 7/2020-21-ன்படி மாநில அளவில் The Hindu ஆங்கில நாளிதழிலும் மற்றும் நமது அம்மா தமிழ் நாளிதழிலும் 11.06.2020-அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 11.06.2020 அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மேற்படி பணிகளுக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் 29.06.2020ல் கோரப்பட்டதில் மின்னணு முறையில் M/s.Srinivasa Waste Management Services (P) Ltd., Chennai-600093 என்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும் மின்னணு முறை அல்லாத இரு உறை முறையிலான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெட்டியில; (1) M/s.Arunai Computor Forms, Vellore District (2) Puliyoorsalai Labour Contract Co-operative Society Ltd., Kanyakumari District (3)M/s.Southern Solid Waste Management Service, Kanyakumari District (4)M/s.Saram Enviro Service (P) Ltd., Chennai (5)M/s.Soya Trust, Tirunelveli ஆகிய 5 நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் (1) M/s.Arunai Computor Forms, Vellore District (2) Puliyoorsalai Labour Contract Co-operative Society Ltd., Kanyakumari District (3) M/s.Srinivasa Waste Management Services (P) Ltd., Chennai-600093 (4) M/s.Soya Trust, Tirunelveli ஆகிய நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் தகுதியிழந்ததாக கருதப்பட்டு நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள (1) M/s.Southern Solid Waste Management Service, Mulagamoodu (Po), Kannyakumari District மற்றும் (2) M/s.Saram Enviro Service (P) Ltd., Chennai ஆகியோரது ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களுடைய விலைப்புள்ளி அட்டவணைகள் மட்டும் 21.08.2020 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | சதவிகிதம் % |
|---|---|---|---|---|
| 1 | M/s.Southern Solid Waste Management Service, Mulagamoodu | 1,61,51,880/- | 1,63,56,573/- | மதிப்பீட்டை விட 1.27% அதிகம் |
| 2 | M/s.Saram Enviro Service (P) Ltd., Chennai | | 1,63,18,247/- | மதிப்பீட்டை விட 1.03% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Saram Enviro Service (P) Ltd., Chennai நிறுவனத்தின் விலைவிகிதம் மதிப்பீட்டைவிட 1.03% அதிகமானதாக உள்ளதால், அது ஏற்கத்தக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய முடிவு செய்து அதன்படி ஒப்பந்ததாரருக்கு 21.08.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்த நிறுவனம் தமது 24.08.2020ம் தேதிய கடிதத்தில் இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியாலும் எங்களால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளது.

எனவே, 24.08.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Saram Enviro Service (P) Ltd., Chennai நிறுவனம் தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியாலும் எங்களால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்பதனை ஏற்று மதிப்பீட்டை விட 1.03% (ஒப்பந்த மதிப்பு 1,63,18,247/-) கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்குட்பட்ட மாநகராட்சி பள்ளிக்கட்டிடங்கள், அரசு பள்ளிக் கட்டிடங்கள், பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கட்டிடங்கள் ஆக மொத்தம் 45 எண்ணம் பள்ளிக்கட்டிடங்களில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் பள்ளி வளாகங்களில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்கு 135 தூய்மை பணியாளர்கள் மற்றும் 4 மேற்பார்வையாளர்களை ஒரு வருட காலத்திற்கு வெளிக்கொணர்வு மூலம் அமர்த்தி கொள்ளும் பணியானது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும் பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 24.08.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Saram Enviro Service (P) Ltd., Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,63,18,247/- மதிப்பீட்டை விட 1.03% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 105:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ஒ.பு.அ.எண். 7/2020-21 )

---